தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தி. பி. 2018 கடகம் (20-7-1987) 85 காசுகள் (இதழ் எண்: 88)

போராளிகள் சோர்வடைய வேண்டா!

காலம் கனிகிறது; விடுதலைக்கு நாம் இன்னும் விலை கொடுத்தாக வேண்டும்!

வஞ்சகம் வீழும்; இரண்டகம் சாகும்; உண்மை வெல்லும்!



பலவகையான குழப்பங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இடையேயும் தமிழீழ விடுதலைப்' போராளி(புலி)கள், தமிழீழப் போராட்டத்தை மிக நன்றாகவே எதிர்கொண்டு, களத்திலிருந்து விலகாமல் போராடி வருகிறார்கள். உயிர்ச் சேதங்கள் நாம் நினைத்ததற்குக் கூடுதலாகவே நேர்ந்து வருகின்றன என்றாலும், மிகவும் உள்ளமுங்கிப்போன பின்தங்கிய ஒரு பேரினத்தின் விடுதலை மீட்சிக்கு இதை விடவும் கூடுதலான விலை கொடுத்தே ஆகவேண்டும். இந்த வகையில் யாருமே மனஞ் சோர்ந்து போக வேண்டியதில்லை. குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் வெகு மூவுரமாக் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விடுதலை வீரர்கள் துளியும் ஊக்கமிழந்து, மனம் சோர்வடைந்து விட வேண்டுவதில்லை.

தீமைகளும் கொடுமைகளும் மாந்தவியலுக்கு எதிராக நின்று அழிவுகளை மேற்கொள்ளும் நிலையில், உயிர்ச் சேதங்களும், நலக் கேடுகளும் நாம் எதிர்பார்ப்பதை விடவும் கூடுதலாகவே தோன்றும். ஆனால் உண்மையான மக்கள் நல முயற்சிகள் தோல்வியடைவ தில்லை. எனவே கொடுமைகளைப் பார்த்து எவரும் அஞ்சிவிட வேண்டா. ஊக்கம் இழக்க வேண்டா. மேலும் மேலும் உறுதிப்பாடே நம் உள்ளத்தில் தோன்றுதல் வேண்டும். காலம் கனிகிறது; விடுதலைக்கு

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

ஐயோ தமிழகமே!

இராமேசுவரத்தில் இந்திவெறி இல்லையாம்!

இராமேசுவரத்தில் விளம்பரப் பலகைகள் இந்தியிலும் எழுதப் படுகிறதாம். அங்குச் செல்லும் பத்தர்(பக்தர்)களில் எழுபது விழுக்காடு வட நாட்டினர் என்பதே இதற்குக் காரணம். எனவே '**அங்குள்ள வணிகர்கள் மொழி வெறியுடன் இருக்கவில்லை**' என்று ***தினமணி*** பேசுகிறது. தமிழ் நாட்டுப் பத்தர்கள் உள் நாட்டுக் கடவுள்களை மறந்து விட்டு வெளி மாநிலக் கடவுள்களைக் காணச் சென்றாலோ—பிற பணிகளை முன்னிட்டு வெளி மாநிலம் சென்றாலோ, அநத ஊர் மொழி தெரிந்திருப்பது தான் ஞாயம் என்று பேசும் அக் கூட்டம், இங்கு வரும் வட நாட்டினர் தமிழ் தெரிந்திருக்கத் தேவையில்லை என்று பேசுகிறது. அதை மொழி வெறி யென்றும் எள்ளுகிறது. ஆயிரமாண்டுகள் வாழ்ந்த இந் நிலத்திற்கும், பேசிய மொழிக்கும் கூட நன்றியில்லாத இக் கூட்டம் இதை விட அதிகமாகக் கூடப் பேச இயலும்!

குருகுல அமைப்பில் பார்ப்பனியம்!

சென்னையை அடுத்த சிங்கா நல்லூரில் 5000 மாணவர்கள் குருகுல அமைப்பில் கல்வி கற்கக் கூடிய 18கோடி செலவிலான ஒரு புதிய பள்ளி நிறைவடையும் நிலையில் உள்ளதாம். நாடு முழுவதிலுமாக இதில் மாணவர்கள் சேர்க்கப் பெற்றுச் சமற்கிருதம் போன்ற இந்திய மொழிகளில் இந்திய மரபு வழியையும், பண்பாட்டையும் குழைத்துக் கொடுக்கப் போகிறதாம். இந்தியப் பண்பாடு —கலைகள் என்னும் பெயரில் எவ்வளவு நாளைக்குத்தான் அவர்களுடைய ஆரியப் பண்பாட்டைக் கலைகளைப் புகுத்தப் போகிறார்களோ? அதற்குத்தாம் எத்தனை முறைகளோ? அதில் இந்தக் குருகுலப் பள்ளியும் ஒன்று. இதற்குத்தான் எவ்வளவு தாராளமான அரசு ஒதுக்கிடு பார்த்தீர்களா?

புதிய மொந்தை; பழைய கள்!

'புதிய கல்விக் கொள்கை', 'புதிய மருந்துக் கொள்கை' என்றெல்லாம் நாளும் 'புதிய' என்ற அடையுடன் பல கொள்கைகள் உலா வருகின்றன. இந்தப் புதிய கல்விக் கொள்கை யாரால் உருவாக்கப்பட்டது என்று கூடத் தெரியாது. ஆனால் ஆளுங்கட்சி எதைக் கூறினாலும் தலையாட்டுகிற மக்களுக்கு மெக்காலே கல்வி முறை முதல் இது போன்ற ஆயிரம் கொள்கை வந்தாலும், அடுத்து ஆளுங்கட்சி மாறும் வரை குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க முடியும். இக் கொள்கையைக் கொண்ட பள்ளிகளில் இந்தி, ஆங்கிலம் மட்டும் படிப்பதால் தமிழ் அழிந்து விடாது என்பது ஒரு பிரிவினரில் பூசல் கருத்து. ஒரு மொழி எந்தெந்த அளவிற்குப் பயன் படுத்தப் படுகிறதோ அந்த அளவில் தான் அது வளரும் என்று தெரிந்து தானே இந்தியைப் புகுத்துவதும் இறந்து போன வடமொழியில் திரைப் படங்கள் கூட காட்டுவதும் நடைபெறுகின்றன.

உணர்வுக்கு உணவு தீர்வாகுமா?

'தமிழ் நாட்டில்தான் மிகுதியான வறுமை நிலவுகிறது. எனவே இங்கு கொண்டு வந்த பொருள்களைத் தமிழ் நாட்டிலேயே சென்று கொடுங்கள்' எனச் சிங்கள அரசு கூறுவதும், 'தங்கள் உணவு தேவையில்லை; பாதுகாப்பும் விடுதலையுந்தாம் தேவை' என இந்திய அதிகாரிகளிடம் ஈழ மக்கள் அழுது கூறியதும் ஒரே கருத்துடையவை. தேவையற்றதைக் கொடுத்து விளம்பரப் படுத்திக் கொள்ள முயல்கிறது இந்திய அரசு. உணர்வை உணவால் அடக்கி விடலாம் என்ற நிலையில் ஈழத் தமிழர்களையும் எளிதாக எண்ணப் பார்க்கிறது.— ***நிலையன்***

அவாளே தெய்வமா?

விடைத் திங்கள் 6ஆம் பககல் காஞ்சியில் வரதராச பெருமாள் கோயில் தேர் இழுப்பு நிகழ்ச்சி நடந்தது. அதிகமான மக்கள் திரளினால் முதல் நாள் தேர் கட்டுக் கடங்காமல் ஓடிய தேர் பல சிதைவிற்குப் பிறகு அன்று ஓடாமல் நிறுத்தப்பட்டது. பின், பொறியாளர்கள் பலரை அழைத்துத் தேரைச் செப்பனிட்டு மறுநாள் தேரை இழுக்க சொன்னார்கள். திரும்பவும் பத்தர்கள் கூடித்தேரை இழுத்து 'அருள்' பெற்றுத் திரும்புவோமென்று, கோடை வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு கால் கடுக்கக் குழந்தைகளோடு நின்றிருந்தனர். ஆனால் தேர் இழுக்கப்படவில்லை. பல மணி நேரத்திற்குப் பிறகு தேர் இழுக்கப் படாதது பற்றி விளக்கம் கேட்க, அவர் குடியரசு துணைத்தலைவர் வெ(ட்க)ங்கட்டராமன், காஞ்சி மடத்தலைவர் — சங்கராச் சாரியாரைப் பார்த்து வணங்கி வாழ்த்தை (ஆசியை)ப் பெற வந்துள்ளார். அதனால் அவர் வந்து போகும் வரை இழுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே மக்கள் 'வெங்கட்டராமன் ஒழிக! சங்கராச்சாரி ஒழிக' என முழக்கமிட்டுள்ளனர். இதைப் பொறுக்க மாட்டாத காவலர்கள் குண்டாந் தடியால் பொது மக்களை அடித்து விரட்டியுள்ளார்கள்.

பல ஆயிரம் பொது மக்கள் வேலை வெட்டி இல்லாதவர்கள் போலவும், எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் போற்றிப் புகழும் தெய்வம் காத்துக் கொண்டும் இருக்கலாம்; ஆனால் இவர்கள் வந்த வேலை தான் முகாமையானது என்று செய்திருக்கிறார்கள் என்பதை நினைத்தால் இந்தத் தமிழர்கள் இளித்தவாயராக உள்ளார்களே என்றுதான் மிக்க துயரமாகவுள்ளது. ஆகவே இவர்கள்தாம் (பார்ப்பானகள்) தெய்வத்திற்கெல்லாம் தெய்வம் என்று மெய்ப்பித்துள்ளார்கள்.

—ப. ***சிவபெருமான்***

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 கடகம் (20-7-1987) இதழ் எண்-88

குடியரசுத்தலைவர் தேர்தலும் முடிவும்

இந்தியாவைப் பொறுத்த அளவில், குடியரசுத் தலைவர் என்பவர் ஒரு பொம்மையைப் போன்றவரே! பாராளுமன்றம் என்னும் திறவு கோலால் முடுக்கி விடப்பெற்றால் ஆடுகின்ற பொம்மை அது. அந்தத் திறவுகோலை வைத்திருப்பவர் தலைமையமைச்சர். அவர் தாம் அதிகார ஆட்சித் தலைவர். இவருக்குக் கட்டுப்படாமல் எந்தக் குடியரசுத் தலைவரானாலும் அவர் எவ்வளவு பெரிய மேதையானாலும், தனித்து இயங்க முடியாது; இயங்கவும் கூடாது—என்பதே இந்திய அரசியல் அமைப்பியல் சட்டம் கூறும் உண்மை. இது தொடர்பான எத்தனை வகையான விளக்கங்கள், விரிவுரைகள் கூறப் பெற்றாலும் நிலைமை இதுதான். இதனால் தான், பாராளுமன்றப் பெரும் பான்மையை எந்த வகையாலோ கட்டிக் காத்து நிலைப்படுத்திக் கொள்ளக் கூடிய வலிமை (அவ்வலிமை எதனாலும் ஏற்படலாம். அஃதாவது பணத்தாலும் ஏற்படலாம். சலுகை, சாய்கால்காளாலும் ஏற்படலாம்—அத்தகைய வலிமை) உடைய ஒருவர் முதலமைச்சராகி விட்டால், அவரே, இந்தியாவைப் பொறுத்த மட்டில் அனைத்து அதிகாரியுமாகி விடுகிறார்.

இந்த நிலையில் குடியரசுத் தலைவர் தேர்தலை, அமைப்பியல் சட்டத்தை உருவாக்கிய மேதைகள் ஏன் வைத்தார்களோ தெரியவில்லை. இத்தகைய ஒரு பொம்மை அதிகாரியைத் தேர்ந் தெடுப்பதிலும் அவரை வைத்திருப்பதிலுந்தாம் பொது மக்கள் பணம் எவ்வளவு பாழாகிறது என்பதை எல்லாப் பொது மக்களும் அறிந்து கொண்டார்களானால், அதன் பொருட்டாகவே இந் நாட்டில் ஒரு பெரும் புரட்சி ஏற்படும் என்பதில் ஐயமில்லை. எனவே மாநில ஆளுநர் பதவியைப் போலவே குடியரசுத் தலைவர் பதவியும் குந்தித் தின்னும் கோயில் யானையைப் போன்றதே! எனினும் 'குடியரசு' என்னும் 'அழகிய' அமைப்புக்கு அப்பதவி ஓர் ஏமாற்றுத் தனத்திற்காகிலும் தேவை என்று வைத்திருக்கிறார்கள். இது ஒருபுறம் இருக்கட்டும்.

இக்கால் நடந்து முடிந்துள்ள குடுயரசுத் தேர்தல் ஒரு மக்கள் நாயகக் கண்துடைப்பே. தலைமையாச்சராக இப்பொழுது பதவி விற்றிருக்கும் **இராசிவ் காந்திக்கு** யாரைப் பிடிக்கிறதோ அவர்தாம் குடியாசுத் தலைவர். ஒருவேளை அவர் மனைவி **சோனியா காந்தியை** அவர் குடியரசுத் தலைவராக ஆக்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதை யெதிர்த்து ஏன்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்)

சிறப்பாசிரியர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தென்மொழி மா. பூங்குன்றன்

துணையாசிரியர்கள்:
தென்மொழி.கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:
பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச் செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
மா. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:
பாவலர். கடலூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,

உதவியாளர் குழு:
அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்.

அச்சிட்டாளர்:
தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:
தென்மொழி. இரா. இளம்பிறைச் செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:
தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:
தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ,
எசு. ஆர். எசு. பிரான்சிசு,
தென்மொழி. ஆறிறைவன்.

கட்டணம்:

	உள்நாடு	வெளிநாடு வான்	வெளிநாடு கடல்
தனியிதழ்	0-85	6-00	4-00
ஆண்டுக் கட்டணம்	44-00	320-00	220-00
அரையாண்டுக் கட்டணம்	22-00	160-00	110-00
வாழ்நாள் உரு.	750	5000	3500

தொடர்பு முகவரி:
தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829

அதிகார வகுப்பினரை எதிர்ப்பது வன்முறை, 'பயங்கரவாதம்' ஆகுமா?

கடந்த பத்தாண்டுகளாகச் செய்தித்தாள்களிலும் செய்திகளிலும் அதிகமாக ஒரு சில சொற்களே திரும்பத் திரும்ப ஒலிக்கின்றதை நாம் கவனிக்கிறோம். அரசுச் சார்பாக **இந்திய ஒற்றுமை, இந்திய ஒருமைப்பாடு, பாரதம், பரத கண்டம்** என்னும் சொற்கள் ஒலித்து ஒலித்துப் புளித்துப்போய்விட்டன. அச்சொற்கள் புளிக்கத் தொடங்கிய பின் **வன்முறை, தீவிர'வாதி'கள், 'தீவிரவாதம்' 'பயங்கரவாதி' 'பயங்கரவாதம்'** என்னும் சொற்கள் எங்கும் ஒலிக்கத் தொடங்கின. பஞ்சாபில் 'தீவிரவாதி', அரியானாவில் வன்முறை, அசாமில் 'பயங்கரவாதி,' கூர்க்கர் தீவிர 'வாதி'கள், பரோடாவில் வன்முறை இவை போன்ற செய்திகள் வராத செய்தித்தாளே இருக்க முடியாது.

இந்தப் 'பயங்கரவாதி,' தீவிர'வாதி,' வன்முறையாளர் என்றும் சொற்களுக்குப் பொருளென்ன? இந்தச் சொற்களுக்குரியவர்கள் யாவர்? இவர்கள் யாருக்குப் 'பயங்கரவாதி'கள்? எதில் தீவிரம் காட்டினார்கள்? என்ன வன்முறை செலுத்தினார்கள்? நாளுக்கு நாள் இவர்களின் தொகையும், இவர்களைப் பற்றிய செய்திகளும் அதிகமாகிக் கொண்டு வருகின்றனவே; இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்? மக்களிலிருந்து உருவாகிறார்கள் என்றால் என்ன காலத்தேவை குறித்து இவர்கள் உருவாகிறார்கள்?

இவற்றுக்கெல்லாம், பொதுவான செய்திகளைப் படிப்பவர்ஒருவர் ஏதேனும் விளக்கம் கூற முடியுமா? அல்லது அப்படியொருவரை அவர் அடையாளம் கண்டு கொள்ளத்தான் முடியுமா? முடியவே முடியாது. அதனால் ஏதோ பெரிய உண்மைகளை அறவே மூடி மறைத்துப் பொதுச் சொற்களால் அழைக்கப்படும் நிலைகள்தாம் இவர்களுக்கு இப்பெயர்களைக் கொடுக்கின்றன.

கடந்த கால நெருக்கடிநிலையில் இந்தியப் பாதுகாப்புப் பேணுகைச் சட்டம் (MISA) என்ற பெயரில் தமக்குத் தனி நிலைப்பகை, கட்சிப் பகை இவற்றுடன் பொது மக்கள் ஏமாற்று, இவை காரணங்கூறாமல் தண்டிக்கும் நிலை இருந்ததுபோல் 'பயங்கரவாதம்', 'தீவிர'வாதம்' வன்முறை என்னும் சொற்களின்கீழ் காரணம் என்னும் நிலைகள் இல்லை.

சில நாள்களுக்கு முன் 'டார்சிலிங்'கில் 150 தீவிர'வாதி'கள் படைத் துறைப் பிரிவை முற்றுகையிட்டு வெடி மருந்துகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்', என்றொரு செய்தி வந்தது. இந்த 150 'தீவிரவாதி'களும் ஒருங்கே சேர்ந்து ஒரே நோக்கத்துடன் முறைப்படி முற்றுகையிட்டு ஒரு செயலைச் செய்துள்ளனர் என்றால், அதில் வெற்று ஆரவாரம் என்றில்லாமல் ஏதோ ஒரு பெருநோக்கம் இவர்களிடம் இருக்க வேண்டும். படைத் துறையினர் மீது ஏற்பட்ட உள்ளூர் வெறுப்போ, அதிகாரிகள் மீதுள்ள மாநில அளவிலான வெறுப்போ, அரசின் மீதுள்ள இந்நாட்டு அளவிலான, உரிமை யடக்குதலான —இன வல்லாண்மைப் படுத்த எதிர்ப்போ இந்நோக்கத்திற்கு அடிப்படையாக இருந்திருக்கலாம்.

ஆனால் எதையுமே வெளிப்படுத்தாமல் அவர்களின் அழிவுகளை மட்டும் ஒரு சார்பாக அரசு வெளியிடுகிறது. வெளிப்படுத்துத்தினால் 'தீவிரவாதம்' நாடுமுழுவதும் பரவி விடக்கூடும் என்று மறைக்கிறது என்பது வெளிப்படை. இதுவே ஒரு குடியரசு அமைப்பிற்கு மாறானது. அவ்வாறு நாடு முழுவதும் ஒரு கொள்கை பரவி கிளர்ச்சி ஏற்படுமாயின் அது நேர்மையான பெரும்பான்மை சார்ந்த குடியரசு அமைப்பிற்கு மாறாத கொள்கையாகத் தானே இருக்க முடியும். மக்களை முடி வைத்து மழுங்கடித்துச் செய்தியை மறைத்துக் குடியரசு அமைப்பை வாழவைத்து விட முடியாது. ஆனால் இடைக்காலத்தில் அரசு போராளிகளின் அழிப்புகளை மட்டும் படம் பிடித்துக் காட்டி மக்களிடம் ஒரு தெளிவில்லாத வெறுப்பை மட்டும் 'தீவிரவாதிகள்' என்னும் பெயரால் ஈட்டித் தருகிறது. ஆனால் அது நிலையான வெறுப்பாக நிலைத்து விட முடியாது.

இவ்வாறு செய்தும் 'தீவிரவாதி'கள் பெருகித் தானே வருகின்றனர். எனவே 'தீவிரவாதம்' நல்ல நோக்கங்கள் சிலவற்றையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அது முதலாளியத்திற்கும் அதிகார வகுப்பினர்க்கும் மாறுபட்டதாக இருக்கவேண்டும் என்று தெளிவாகத் தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல் 'தீவிரவாதம்' அதிகார நிலையில் உள்ள சிறு வகுப்பினர் தங்கள் நலத்திற்காக மிகுதியான நன்மை பெறும் நிலைகளை எதிர்த்துப் போராடுவதாகவே தோன்றுகிறது.

பார்ப்பனிய எதிர்ப்பு இந்து மத எதிர்ப்பாகக் காட்டப் பெறுவது போல், பார்ப்பனர்கள் அடாத வெறுப்பினால் தாக்கப்படுவது, இந்துக்கள் தாக்கப்பட்டதாக விளம்பரப் படுத்தப் பட்டுப் பிராமணரல்லாத பெரும்பான்மை மக்களையும் சார்பு படுத்திக் கொள்கிறது. அதிகார வகுப்பினரைத் தாக்குதல் பாரத எதிர்ப்பாகவும் ஒருமைப்பாட்டு எதிர்ப்பாகவும் திரித்துக் காட்டப்பெறுகின்றன.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

எதிரொலி

O 'சைல்சிங்குக்கு அடுத்த படியாகக் குடியரசுத் தலைவராக ம. கோ. இரா. வரவேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்ட போது, கட்சியின் நலன் கருதி அதை அவர் ஏற்க மறுத்து விட்டதாகக் முன்னாள் அமைச்சரும், இந்நாள் பாராளுமன்றத்தின் அ. தி. மு. க. குழுத்தலைவரும் ஆகிய குழந்தை வேலு கூறினார்.

—செய்தி: (24-6-87)

— மாநில அளவிலான நிலையில் ம. கோ. இரா.வை வைத்துத் தமிழ் மக்களை அடிமைப் படுத்தத்தான் உங்கள் அப்பன் இராசீவ் காந்தி நினைக்கிறாரே தவிர, இந்திய அளவில் ஏற்றி வைத்து இவருக்குப் பாத பூசை செய்து கொண்டிக்கும்படி அவர் ஏமாளி யில்லை, குழந்தை (வேலு) அவர்களே!

O ''இராசீவ் காந்தியின் அரசு எப்போது சிக்கலில் மாட்டிக் கொண்டாலும், அதிலிருந்து அது மீள உதவ வேண்டும்; இக்கட்டில் ஆழ்த்தி விடக் கூடாது' என்னும் உருசியாவின் கொள்கைக்கு ஏற்பவே பொதுவுடைமைக் கட்சிகள் இங்கு இயங்குகின்றன.—எல். கே. அத்வானி.

தலைவர் பாரதீய சனதா கட்சி (28-6-87)

— உருசியாவுக்குத்தான் இராசீவ் காந்தியின் மேல் எவ்வளவு அக்கறை! கரிசனம்! — அவர் மேல் காட்டும் பரிவு இங்கு நசுக்கப்படும் தேசிய இனங்களின் மேல் ஏற்படவில்லையே! ஆமாம்! இங்குள்ள பொதுவுடைமைக் குஞ்சுகள் பாரதத் தாய்க்கும் உருசியத் தந்தைக்கும் பிறந்தவர்களோ?

O மதுரையில் போட்டிப் பல்கலைக் கழகம் நடத்திப் போலிச் சான்றிதழ்கள் வழங்கிய மூவரைக் குற்றப் பிரிவு(கழுக்க)க் காவலர்கள் சிறைப் படுத்தியுள்ளனர்.

-செய்தி 28-6-87.

— எது போலி அல்லது போட்டிப் பல்கலைக் கழகம் எது சரியான பல்கலைக் கழகம் என்று இந்தியாவில் இனங் கண்டு கொள்வது அரிது! அப்படி மூலத்திற்கும் போலிக்கும் அடையாளம் தெரியாதவாறு நம் நாட்டு அரசியல் ஆக்கியிருக்கிறது!

O 'விடுதலை வேண்டும்; உணவு வேண்டாம்'—, வடமராச்சிப் பகுதியைச் சுற்றிப் பார்த்த இந்தியச் செங்குறுக்கைக் கழக (செஞ்சிலுவைச் சங்க) அதிகாரிகளிடம், அங்குள்ள தமிழர்கள், தங்களுக்கு உணவு தேவையில்லை; பாதுகாப்பும் விடுதலையுந்தான் தேவை என்று அழுது கூறினார்கள்.

—செய்தி 2-7-87

— ஆனால், 'உணவுதான் தருவோம்; விடுதலை தரமாட்டோம்; வேண்டுமானால் தின்று விட்டுச் சாகுங்கள்' — என்றல்லவோ இந்திய அரசு சொல்லாமல் சொல்கிறது. அதற்கு என்ன செய்வது? இது யாழ்ப்பாணத் தமிழரின் உணவுத் தேவையை நிறைவு செய்யும் பரிவு இல்லை; செத்துக் கொண்டிருப்பவர்களுக்குச் சாத்தண்ணீர் ஊற்றும் செய்கை!

O 'குடியரசுத் தலைவர் வெறும் சுவடிக்கப்பட்ட பொம்மையாக, அரசு சொன்னதையே சொல்லும் இயந்திரமாகச் செயல்பட வேண்டும் என்றால் அப்பதவி எனக்கு வேண்டாம். அரசுக்குக் கருத்துகள் கூறவும், எச்சரிக்கை செய்யவும், தட்டிக் கொடுத்து ஊக்கப் படுத்தவும், கண்காணிக்கவும் உரிமை இருக்குமானால், குடியரசுத் தலைவருக்குரிய ஒரு வேட்பாளராகும் தகுதி எனக்குள்ளது. -வி.ஆர். கிருட்டிணய்யர் 1-7-87—அகமதாபாது செய்தியாளர் கூட்டத்தில்

— குடியரசுத் தலைவருக்கு இவ்வுரிமைகளெல்லாம் (இந்திய ஒட்டைச் சட்டப் பொத்தகத்தில்) இல்லை — என்பது ஒய்வு பெற்ற உச்சநெறி மன்ற நடுவருக்குத் தெரியாதா என்ன? பின்னெதற்குக் கிருட்டிணய்யர் 'இருக்குமானால்' என்று இழுத்துப் பேசுகிறார். இந்தியாவில் குடியரசுத் தலைவராகும் தகுதி கிருட்டிணய்யருக்கு மட்டுமில்லை. இங்குள்ள எந்தக் குடிமகனுக்குமே உண்டு... தலைமையச்சராக இருப்பவர் சொன்னபடி ஓர் இழுவைமுத்திரை (Rubber Stamb) போல நடந்து கொள்ள வேண்டியது தானே! ஆனால் தேர்தலில் நிற்பதற்கு முன்பே இராசீவ் காந்தியைக் முதலில் காக்காய், பிடிக்கத் தெரிந்திருக்க வேண்டுமே! கிருட்டிணய்யருக்கு அது ஏன் தெரிய வில்லையோ?

O நல்லொழுக்கம், நன்னடத்தை, கட்டுப்பாடு—ஆகியவற்றோடு இருக்கும் மாணவர்களுக்குப் படிப்பைத் தொடர உரிமை உண்டு. அந்த உரிமையில் யாரும் தலையிட முடியாது. ஆனால் அவ்வாறு இல்லாமல் தவறு செய்பவர்கள் அந்த உரிமை கோர முடியாது. ஆகவே பள்ளியிலிருந்து வெளியேறியதாக, அத்தகைய மாணவர்களுக்குச் சான்று கொடுத்து அனுப்ப, பள்ளி ஆளுகையாளர்களுக்கு உரிமை உண்டு.

—ஒரு வழக்கில் உயர்நெறி மன்ற நடுவர் எசு. மோகன்—தீர்ப்பு (2-7-87)

—இத்தீர்ப்பு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுந்தானா? நம் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்துமா? இவ்வாறு இருந்தால்தான் மாணவர்களுக்கு அவற்றை வலியுறுத்துவதில் ஒரு ஞாயம் இருக்க முடியும்.

Scanned with CamScanner

தமிழ் நாட்டில் சாலைகள் சீர்கெட்டுள்ளன - ஏன்?

பத்தாண்டுகளுக்கு முன்புவரை தமிழகச் சாலைகளின் நேர்த்தியைப் புகழாதவர்கள் இருக்க மாட்டார்கள். இந்தியாவிலேயே நல்ல சாலைகள் இருந்த மாநிலம் தமிழகம். ஆனால் இன்றைய நிலை என்ன?

இன்று இந்தியாவிலேயே இழிவான சாலைகளை உடைய ஒரே மாநிலம் தமிழகந்தான். அதற்குக் காரணம் என்ன? மாநில அரசு சாலைகள் போட சரியான பணம் ஒதுக்க வில்லையா? அதுதான் இல்லை. தேவையான அளவு பணம் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியும் சாலைகளின் சீர்கேடான நிலைக்குக் காரணம் என்ன?

முன்பு சாலைகளுக்குக் கரிநெய் (தார்) போட ஒரு கோடி உருபா ஒதுக்கினால், எண்பது இலக்க உருபாவை உண்மையில் சாலை போடப் பயன் படுத்துவார்கள். இருபது இலக்க உருபாவைக் குத்தகைக்காரர்களும் தொடர்புள்ள அரசு அதிகாரிகளும் பங்கு போட்டுக் கொள்வார்கள். ஆனால் இன்று எண்பது இலக்க உருபாவைக் கொள்ளை அடித்து விட்டு இருபது இலக்க உருபாவில் சாலை போடுகிறார்கள். அன்று போட்ட சாலைகள் 5 ஆண்டுகள் வரை உறுதியுடன் இருந்தன. ஆனால் இன்று போடும் சாலைகளோ ஐந்தாவது மாதத்திலேயே ஒட்டுப் போடும் நிலைக்கு வந்து விடுகின்றன.

எம். ஆர். எல். நிறுவனத்திடமிருந்து முன்பெல்லாம் கரிநெய் (தார்) கிடுவங்(பேரல்)களில் ஏற்றப்பட்டுச் சாலைகள் போடுவதற்குக் கொடுக்கப் பட்டு வந்தன. அவற்றுள் ஒன்றிரண்டு கிடுவங்கள் ஒழுகி விட்டாலும், மீதியுள்ளவை சாலைகள் போடுவதற்குப் பயன் படுத்தப்பட்டன. வெற்றுக் கிடுவங்களைக் கூட அரசின் வயம் ஒப்படைக்க வேண்டிய சூழ்நிலை அன்று இருந்தது. இதில் 10 கல்லெடை (டன்) கரிநெய் 60 கிடுவங்களில் பிடிக்கப்பட்டு வந்தால், 5 கிடுவங்கள் சேதமடைந்தாலும் 55 கிடுவங்களாவது சாலைகள் போடப் பயன் படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய நிலை என்ன? கிடுவங்களுடன் கரிநெய் வாங்கினால் அதன் விலை அதிகமாகிறது என்று தமிழகப் பொதுப் பணித்துறையில் உள்ள மேதை எவனோ அரசுக்கு ஊதியம் ஈட்டித்தர, தேங்கி (Tanker) சரக்குந்தைப் பயன்படுத்த வேண்டும் என்றானாம். அதன் விளைவு இன்று நடக்கும் பகல் கொள்ளை ஆகும்.

இன்று தேங்குச் சரக்குந்துகளில் ஏற்றப்படும் கரிநெய்யைப் பாதி அளவு கூட நிறுவனங்களில் இறக்குவது இல்லை. பாதிக் கரிநெய் இறங்கியவுடன் அதிகாரிகளுக்குக் கல்லெடைக்கு இவ்வளவு என்று கையூட்டுக் கொடுத்துச் சரி கட்டி மீதியை வழியில் உண்மை விலையில் பாதிவிலைக்குக் கரிநெய்த் திருடர்களிடம் விற்று விடுகின்றனர்.

இன்னும் சில தேங்குக் குத்தகையாளர்கள், தேங்குக் கரிநெய்ச் சரக்குடன் மணலி நெய்க் கிடங்கிலிருந்து வெளி வந்தவுடன், சரக்குந்தைச் சென்னை நகரிலேயே மறைவாக நிறுத்தி விட்டு, அதன் தொடர்பான பதிவுகள் அடங்கிய உறைகளை மட்டும் பணத்துடன் எடுத்துக் கொண்டு சரக்கு இறக்க வேண்டிய இடத்திற்குச் செல்லுகின்றனர். அங்குச் சரக்கை இறக்க வேண்டிய அதிகாரிக்கு வழக்கமான கையூட்டைக் கொடுத்து விட்டுச் சரக்கு முழுவதையும் இறக்கி விட்டதாக, அலுவலக முத்திரையுடன், பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு, சென்னை வந்து, கரிநெய்த் திருடர்களிடம் முழுச்சரக்கையும் விற்று விடுகின்றனர்.

இந்த வகையில் சரக்குந்தை ஓட்டாமல் முழுவாடகையும், 10 கல்லெடை சரக்கை விற்ற பணம் உருபா பதினையாயிரம் வரையும், ஒரே ஏற்றத்தில் (லோடில்), தேங்குச் சரக்குந்து உரிமையாளர்கள் சம்பாதித்து விடுகின்றனர். இது நம் தமிழ் நாட்டில் நாள்தோறும் நடைபெறும் செயலாகும். கரிநெய்யைக் கிடுவங்களில் வாங்கினால் செலவு அதிகம் என்று எண்ணியதற்கு எவ்வளவு பெரிய தண்டனை! இதைப் பொதுவாக யாரும் கண்டு கொள்வதில்லை. பெரும்பாலும் கரிநெய்யைத் தேங்கிலிருந்து கிடுவங்களில் இறக்கும் போது, அறுபது முழுக் கிடுவங்களில் பிடிக்காமல் நூறு கிடுவங்களில் சிறிது சிறிதாகப் பிடிக்கின்றனர். காரணம் கேட்டால் அது மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்ல வசதியாக இருப்பதாகக் கூறுகிறார்கள். மற்ற சில விடங்களில் குப்பை போடக் குழிவெட்டுவது போல் வெட்டி, அதில் நிரப்புகின்றனர். அதை என்றாவது எடுக்கும் போது கணக்குப் பார்த்தால்தானே கரிநெய் குறைவது தெரியும்.

இதைப் படிக்கும் அரசு அதிகாரிகள் தமிழக மெங்கும் கரிநெய் இறக்கும் இடங்களை ஆய்வு செய்து பார்த்தால், பொறுப்பில் உள்ள எல்லா அதிகாரிகளும் வேலை இழக்க நேரிடும். பல ஆண்டுக் காலமாக இவ்வளவு பெரிய திருட்டுகள் நடந்து கொண்டிருந்தும், யாருமே இதைக் கண்டு கொள்வதில்லை. நூறு கல்லெடை கரிநெய் தேவை என்றால், அரசு 50 கல்லெடைக் கரிநெய்தான் ஒதுக்குகிறது. அதில் 40 கல்லெடைக் கரிநெய்யைத் திருடிக் கொண்டு 10 கல்லெடைக் கரிநெய்யில் சாலை போட்டால் அஃது எப்படி நீண்ட நாள்களுக்குத் தாங்கும்? — நன்றி; 'லாரி' சூன் 1987.

Scanned with CamScanner

இந்தியாவில் கொடுமைகள்!

பெண்களுக்கு இழைக்கும் மதக் கொடுமை!

வெள்ளை மனங் கொண்ட ஒன்றுமறியாத இளம் பெண்களைக் கோயில் அடிமை (தேவதாசி) களாக ஒப்படைக்கும் முறை கருநாடக மாநிலத்தில் இன்னும் தொடர்கிறது.

கருநாடக மாநிலத்தின் பெல்காம் மாவட்டத்திலுள்ள எல்லம்மா கோயிலுக்கு இளம்பெண்களைத் கோயில் அடிமை (தேவதாசி)களாகப் பொட்டுக் கட்டி விடும் முறை நெடுங்காலமாக இருந்து வந்தது. இம் முறைக்குக் கருநாடக அரசு தடைபோட்டுள்ளது. ஆனால் அத்தடையையும் மிறிப் பொட்டுக் கட்டும் முறை இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக இந்தியப் பொதுநல நிறுவனம் (Indian Health Organisation) தெரிவித்துள்ளது.

இதன் கண்ணியச் செயலாளர் பர். ஐ. எசு. கிலாடா மற்றும் செயற்குழு உறுப்பினர் பர். விசய் தாக்கூர் இருவரும், நடுவண் மாந்த வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பி. வி. நாசிம்மராவைச் சந்தித்து, மதத்தின் பெயரால் நிறைவேற்றப்படும் பொட்டுக் கட்டும் முறை பற்றி முறையீடு செய்தனர்.

இந்தியப் பொதுநல நிறுவனம் கடந்த பிப்ரவரி மாதம் 13 - ஆம் பக்கல் முழுமதிய நாளில் அந்தக் கோவிலின் அருகில் பொதுநலக் கூடம் ஒன்றை அமைத்திருந்தது. அப்போது 1000க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் பொட்டுக் கட்டப் பட்ட சடங்குகளைப் பார்த்ததாக அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு கடவுளுக்கு ஒப்படைப்புச் செய்யப் பட்ட பெண்கள் பம்பாய், புனே, சதாரா, பெல்காம் மற்றும் பிற நகரங்களில் விலை மகளிர்களாக ஈடுபடுத்தப் படுவதாகவும் அவர்கள் கூறினர்.

பாரத நாடா? பார்ப்பன நாடா?

இந்தியாவின் மக்கள் தொகையில் பார்ப்பனர் விழுக்காடு 3 மட்டுமே. ஆனால் அரசின் மிக மேல் மட்ட பதவிகள் அந்தநாள் முதல் இந்தநாள் வரை அவாளுக்கு மட்டுமே உரியவாக இருந்து வருகின்றன. இந்திய விடுதலையின்போது பொது ஆளுநராக (கவர்னர் செனரலாக) இராசாசி அமர்த்தப் பட்டார். அதன்பிறகு இன்றுவரை குடியரசுத் தலைவராக அப்பதவியைப் பெற்றவர்களில் தற்காலிக ஓரிருவர் தவிர மற்றவர் பார்ப்பனரே. இப்போது இப்பதவிக்கு ஆளும் கட்சிச் சார்பாகத் தமிழருக்கு எதிரான பார்ப்பனர் ஒருவர் அறிவிக்கப் பட்டுள்ளார். ஆளும் கட்சியின் நிலை அதுவென்றால் எதிர்க் கட்சிகளின் சார்பாக இத் தேர்தலுக்கு அறிவிக்கப் பட்டுள்ளவரும் ஒரு பார்ப்பனர் தாம். ஆக, இந்த இந்தியாவில் ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க் கட்சிகளானாலும் சரி, 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனரைத்தாம் தலையில் தாங்க வேண்டியிருக்கிறது என்றால் பாரத நாடு பெயரைப் பார்ப்பன நாடு என்று மாற்றி விடலாமே!

-தமிழ் நேயன்.

குற்றவாளி அமைச்சராகும் கொடுமை!

இந்திய அரசுச் சட்டத்தின் கண்களுக்கு எளிய மக்கள்தாம் குற்றவாளிகளாகத் தென்படுவர். ஊழல் செய்பவர், கள்ளக்கடத்தல் காரர்கள், கறுப்புப்பண முதலைகள், பதுக்கல் செய்பவர், கலப் படம் செய்பவர்கள் குமுகாயப் பெரிய மாந்தர்களாகக் காட்சியளிப்பர்.

நடுவண் பைதிரத்தில் இர்சூல் அகமதுசித்திக் என்பவர் 1973ஆம் ஆண்டு அவர் நடத்தி வந்த உணவு விடுதியில கலப்படம் செய்து விற்றதாக வழக்கு ஒன்று பதிவானது. அவரிடம் பெற்ற உணவில் கலப்படம் செய்யப் பட்டுள்ளது என்று நிறுவப்பட்டு 1978 ஆம் ஆண்டு வரை 15 முறை சிறைப்பிடி ஆணைகள் அனுப்பப்பட்டன. அவற்றைஅவர் பொருட்படுத்தவில்லை. அப்போது அவர் மாநிலப் பேராயக்கட்சிப் பொதுச் செயலராக உயர்ந்திருந்தார். (தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

உருசியாவிலும் மதவுணர்வு பெருகுகிறது!

சோவியத்து அமைச்சரவையில் மதத் தொடர்பான செய்திகளைக் கவனிக்க ஒரு குழுவே அமைக்கப் பெற்றுள்ளது. அக் குழுவின் தலைவர் கான்சுதாந்தின் கர்சேவ். அவர் 17இல் சோவியத்து அயல்துறை அமைச்சகத்தின் செய்தித் துறையில், மாசுகோவிலுள்ள அயல் நாட்டுத் தூதரகங்களின் தலைவர்களை இரண்டு மணி நேரம் சந்தித்து உரையாடினர்.

நாட்டின் அரசியல் சட்டத்தின் 52ஆவது பிரிவுப்படி, சோவியத்து மக்கள் அனைவரும் மத உரிமையை நுகர்கின்றனர்.

சோவியத்து ஒன்றியத்தில் 20, 000 மத நிறுவனங்கள் உள்ளன; அவை அனைத்துக்கும் இலவயமாக வழிபாட்டு நிலையங்கள் நிறுவப் பெற்றுள்ளன. சோவியத்து நாட்டின் திருச்சபைகள், சமயக் கல்வி கற்பிப்புக்காக 18 கல்லூரிகளை நடத்துகின்றன.

மாசுகோ திருச்சபை மற்றும் பிற மத நிறுவனங்களைச் சேர்ந்த பதிப்பகத் துறையினர், பல்வேறு மத நூல்களின் 1, 300, 000 படிகளை அண்மையில் வெளியிடுவர்.

Scanned with CamScanner

இந்திய அரசியல் அகராதி!

-குன்றன்-

இந்தியா: (அ) - மக்கள் தொகை மிகுந்த, பல இனங்கள் நிறைந்து, பலமொழிகள் பேசப் படும் பல் வேறுபட்ட நாகரிகப் பண்பாடுகள் கொண்ட நாடாக இருப்பினும், ஒருமைப் பாடு என்னும் பெயரால் ஓரினமே ஒரு மொழியை வைத்துக் கொண்டு மற்ற இனங்களை அடிமையாய் ஆளும் ஏழைகள் நிரம்பிய பார்ப்பனிய—முதலாளிய நாடு.

(ஆ) - மேடுகளையும் பள்ளங்களையும் ஒத்த பொருளியல், சாதி, மத, இன, மொழி வேறு பாடுகளைப் உடைய குடிமக்களைப் பொதுவான உடைமையாகக் கொண்ட குடியரசின் பெயரால் இயங்கும் முடியரசுடைய நாடு!

உரிமை (சுதந்திரம்): (அ) நாற்பதாண்டுகளுக்கு முன்பே கிடைத்து விட்டதாக இந்திய அரசால் விளம்பரப் படுத்தப் படுவது;

(ஆ) - அரசு ஊழியர்கள் விடுமுறையாலும், மாணவர்கள் கொடியேற்ற ஊர்வலத்தாலும், குழந்தைகள் இனிப்புகளாலும் உணர்த்தப் படுவது.

(இ) - ஏழைமக்களுக்கும், அன்றுடங் காய்ச்களுக்கும் எட்டாதது - தெரியாதது.

(ஈ) - ஏழை எளிய மக்கள் கவலைப் படாதது;

(உ) - தேசிய இன விடுதலை பேசுபவர்களுக்கும், வன்முறையாளர்களுக்கும், ஒடுக்கும் முறையாலும், சிறைத் தண்டனையாலும் உணரவைக்க முயலப்படுவது.

(ஊ) - வெள்ளையர் ஆளுமையிலிருப்பதை எதிர்த்து இந்திய முதலாளியப் பார்ப்பனியத்திடம் அடிமட்ட அடிமையாகி இருப்பது.

குடியரசு: (அ) பொது மக்களைக் கொள்ளையடிக்க-அடிமைப் படுத்த—அவர்களிடமே ஏமாற்றி ஒப்புதல் பெற்று ஆளும் சூழ்ச்சி முறை

(ஆ) - மக்களின் ஒப்புதலுடன் மரபு வழியாக ஆளும் ஒரு குடும்ப முடியாட்சி முறை.

(இ) - ஒரு சிறு பான்மை இனத்தினர் தங்கள் சூழ்ச்சியால் பெரும் பான்மை மக்களின் ஒப்புதலுடனேயே தங்கள் இனத்திற்கு மட்டும் நலந் தேடிக்கொண்டு சுரண்டுவதற்கு வழி வகுத்துக் கொள்ளும் ஆட்சிமுறை.

(உ) - முதலாளிகளின் முதலை மிகுக்கவும் - ஏழை மக்களின் ஏழ்மையைப் பெருக்கவும் சரியான முறையில் ஏமாற்றுப் பயன்படும் கருவி

தேர்தல்: (அ) கடைசிப் புகலிடமாகத் தேடிவந்தவர்கள் மக்களோடு மக்களாக இணைந்து போலியாக நடிக்கப் புகும் நாடக மேடை.

(ஆ) - மக்கள் தங்கள் கைகளில் ஒப்போலைகளை வைத்துக் கொண்டு நல்ல விலைக்கு விற்க எதிர் பார்க்கும் சந்தைக் கூடம்.

(இ) - அரசியலார்கள் பணப் பெட்டிகளைக் கையில் வைத்துக் கொண்டு சில்லறை விற்பனை யாளர்களையும் மொத்த விற்பனை யாளர்களையும் எதிர் நோக்கும் தரகு (கமிஷன்) மண்டித்தெரு,

(ஈ) - இறந்தவர்களின் ஒப்போலைகளும் உயிர் பெற்றுவரும் வியப்பான மாய்மாலக் கண் கட்டுக் காட்சி,

(உ) - கட்சிக் கூட்டங்கள் தங்கள் பொய் மூட்டைகளை எடையிட்டுக் கொள்ளும் பட்டி மண்டப விழா!

சட்டம்: (அ) - அதிகாரத்திற்கும் பணத்திற்கும் மட்டுமெ வளைந்து கொடுக்கக்கூடிய, நேர்மைக்குத் தலை வணங்காத, ஏழ்மையின் கழுத்தை நெறிக்கக் கூடிய வியப்பான பொருளால் செய்யப்பட்ட (அதிகார)எடைக் கருவி.

(ஆ) - தருக்க வன்மையால், முறையீடு செய்பவர் மீதே குற்றம் சாட்டித் தண்டனை கொடுக்கும் மந்திரக்கோல்!

(இ) - இங்கிலாந்திலிருந்து கொணரப்பட்டு முதலாளியப் பார்ப்பனியத்திற்குத் தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட்ட ஓர் எடை கல்!

(ஈ) - இது குற்றம் செய்யாமல் தடுப்பதற்குப் பயன்படுத்தப் படுவதைவிடக் குற்றவாளியாகாமல் குற்றம் செய்வது எப்படி என்பதை ஆராய்வதற்கே மிகுதியாகப் பயன் படுத்தும் மாயப் பொத்தகம். (தொடரும்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதன்பிறகும் 12 பிடிக் கட்டளைகள் அனுப்பப்பட்டும் இரசூல் அவற்றைப் பெருட் படுத்த வேயில்லை. அப்போது அறச் சட்டமன்ற உறுப்பினராக உயர்ந்திருந்தார். 1981 இல் அறமன்றம் மெல்ல அசைந்து குற்றவாளியை அடையாளம் கண்டு பிடித்துத் தளை செய்ய உத்தரவிட்டது. ஆனாலும் 1982 இல் அறமன்றம் இரசூல் தலை மறைவாகி விட்டதாக அடையாளம் காணமுடியாத தாக வழக்கை நிலைப்படுத்தி விட்டது. 1985 இல் அந்தக் கலப்படக்காரரான இரசூல் அகமது சித்திக் நடுவண் பைதிர அமைச்சராகிவிட்டார்.

வரிப்புலிக்குத் தயக்கமேன்?

—மணிமுத்து. பழனி

ஐயோ எம் உணர்வெல்லாம்,
அதிர்கிறதே எரிகிறதே! யாழ்நிலத்தில்
கொய்துவிழும் தலையெல்லாம்
சேயல்லாம் நெஞ்சுதன்னைக் குத்திக்குத்தி
உய்யவொரு வழிசொல்லா
உடன்பிறப்பா நீயெனுமே! ஊமை உள்ளம்
தொய்வடைந்து சோர்கிறதே.
துணைசெய்யும் இந்தியமோ தூங்க லேனோ?

எண்ணிக்கொள் எம்மவரின்
இறுதிநிலைப் போராட்டம் இனிப்பா
[வாழ்க்கை?
மண்ணுக்காய் விடுதலைக்காய்
மாபுலிகள் திரண்டெழுந்த மானத் தேர்வு!
விண்ணுக்கே போனாலும்
விளைந்துவரும் தலைமுறைகள் வினைமுடிப்பர்!
கண்ணுக்கும் கண்ணாகக்
கடமையென விடுதலையைக் காண்பார் நாளை!

தீப்பிடித்தே எரியுங்கால்
திருவிழவில் அயர்பவர்கள் திகழும் நாட்டில்
கூப்பிடவோ குரல்தரவோ
குறைகேட்டு முறைசெயவோ கோல்சீர்
[இல்லாக்
காப்பளியா அரசுறுப்பில்
கால்வைத்தே நிற்பதுவும் கடமை தானோ?
வாய்ப்பூட்டா கைப்பூட்டா
வரிப்புலிக்குத் தயக்கம் ஏன் வருவாய்
[தோழா?

ஈழத்தை ஏற்புச் செய்க!

'தமிழக அரசே, 'இந்தி'ய அரசே,

'ஈழத்தை ஏற்புச் செய்க,! இந்த முழக்கம் தேசிய இனங்களின் சிறைக் கம்பிகளைத் தாண்டி வருகின்றது. வல்லரசியப் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு வரும் உயிர்முழக்கம், 'ஈழத்தை ஏற்புச் **செய்வோம்'** என்பதாகும்!

சிங்கள உழைப்பாளிகள் உதிரத்தை எரி குண்டுகளாகவும், போர்க் கருவிகளாகவும் மாற்றி ஒட்டச் சுரண்டிக் கொழுக்கும், 'பேரினக் கொடுங் கோலாட்சி'யை எதிர்த்துப் 'பாட்டாளிகள்' ஒரு பால் போராடுகின்றார்கள். இவர்களின் தலைமை தேசியஇனத் தன்னாட்சியை மறுத்த கரிசுக்காக 'பொறுத்தருள்க' என மக்களிடம் வேண்டுதல் செய்கின்றது. ஆனாலும், 'இவர்களை' நம்பி இணைய, 'ஒடுக்கப்பட்ட மக்கள், அச்சம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்! என்றாலும், 'எதிரிகளை இனங்கண்டு எதிர்ப்பதில் தயக்கமோ, மயக்கமோ அவர்களிடம் இல்லை என்று நடை முறையால் நிறுவிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

புரட்சி எங்கள் எல்லை!

-பாவலர் இளஞ்சித்திரன்-

எடுப்பு

கொட்டத் தொடங்கிய போர்ப்பறை
ஒய்வதில்லை! விடுதலை பெறும்வரை!
தமிழர் (கொட்டத்)

தொடுப்பு

தட்டுப் படாக்கால எல்லைமுதல் நிற்கும்,
தமிழைத்—தமிழனை அழிக்கவந்திருக்கும்
பகைகளை எதிர்த்துக் (கொட்டத்)

முடிப்பு

கெட்டுப் பிறக்கவில்லை! உடற்குருதி தூய்மை!
கேடயம்,வாள் வேல்எமக்கே உரிமைஎனும்
[வாய்மை!
விட்டுக் கிடத்தலில்லை; எமைஒருவர் ஆள!
வேங்கைகளாய் நிற்கின்றோம் போர்முகத்தில்
[நீள! (கொட்டத்)

பெற்றுப் பேணியஎம் தமிழ்நிலத்தை மீட்கப்
பிறந்தவர்கள் தாம்நாங்கள்! எம்மையார் கேட்க?
வெற்றுச் சோற்றுக்காய் வந்தவர்கள் இல்லை!
விடுதலைக்கு விலைகொடுக்கப் புரட்சிஎங்கள்
[எல்லை! (கொட்டத்)

சுட்டுத் தள்ளிடினும் தள்ளுகவ ளைத்து!
தூக்கினில் தூக்கிடினும் தூக்குகபி டித்து!
கட்டுக் குலையாத எமதினத்தைக் காக்கக்
கைகளை உயர்த்திவிட்டோம்! பகைஎதிர் சாய்க்க!
(கொட்டத்)

பட்டு விடவில்லை எமதுதமிழ் வீரம்!
பனிமலையை வென்றவர்யாம்! போவோமோ
சோரம்!
அட்டி யிலாததெங்கள் அன்னை நில மண்மேல்
அடித்துக்கை எழுந்துவிட்டோம்! உயர்ந்தது-
[கொடி விண்மேல்! (கொட்டத்)

(முன் பத்தித் தொடர்ச்சி)

இலங்கை அகமுரண்பாட்டின் வெளிப்பாடாக 'ஈழம்' உருவாகிக் கொண்டுள்ளது. அதன் புறவய நிலைமைகள் சரியான முறையில் உருவாகவில்லை. பின்புலமான தமிழ்நாடு, இந்திய அரசுக்குள் கூமுட்டையாக வுள்ளது. இங்கே ஏற்படும் சூழல் விடுதலை கனிந்ததாக இல்லை. எனவேதான், ஈழ விடுதலைக் காலம் தள்ளிப் போகின்றது.

உலகத்தின் தேசியஇன விடுதலை நோக்கை இனியும் தடுத்து நிறுத்திட வல்லரசுகளால் இயலாது என்பதைக் காணத்தான் போகின்றோம்.

—பறம்பை அறிவன்

Scanned with CamScanner

உ.த.மு.க. உறவு மடல்கள்:

1. செய்திதான் என்றாலும்..

ஆசிரியத் தோழர்களே,

நாளேடுகளைப் புரட்டினால், அங்கும் இங்குமாய்க் கல்வித் தொடர்பான செய்திகள் கண்ணில் படவே செய்யும். அவை தூண்டும் உணர்வுகளை ஒரு சேரத் திரட்டினால், நம் தமிழ் நாட்டின் அவலம் தெளிவாகப் புலப்படும்.

நாம் தொடர்பு படுத்தி ஆராய்ந்தால், கல்வியினி அடிப்படை அனைத்துத் துறைகளிலும் தேவையாகவும், இருப்பாகவும் உள்ளதை அறிய முடியும்! குமுகாய அறிவின் தேவையை நாம் நன்கு உணர்ந்தவர்களாக இல்லை!

சாதிக் கலவரம், தெருச்சண்டை, உறவினர்களிடையே பகை, உலகப் போர், ஒப்பந்தம், ஒப்பந்த முறிவு அனைத்திலும் 'கல்வி'யின் தேவை உணரப்படக் கூடியதாகவே உள்ளது.

தென்கொரியாவில் பதினைந்தாயிரம் மாணவர்களும், பொதுமக்களும், காவல் துறையோடு கருவியேந்திப் போராடி வருவதைப் பார்க்கிறோம். மாணவர் போரட்டம் ஒருபால்—

இந்தியாவில் கல்லூரி ஆசிரியர்கள் ஊதிய முறை குறித்துப் போராட்டத்தில் குதித்திடத் திட்டமிட்டுள்ளார்கள் -

கல்வி நிறுவனங்கள் நன்கொடை கேட்பதை மக்களோடு சேர்ந்து எதிர்த்துப் போராடும் ஆசிரியர் மாணவர் அமைப்புகளைக் காண்கிறோம் -

படிப்புக்கும் நடப்புக்கும் உள்ள வேறுபாடு கண்டு இளைய தலைமுறை கொதித்தெழுகிறது! முதுமையாகிப் போனவர்கள் முடமாகிக் கிடக்கின்றார்கள். இவர்களை அப்புறம் தள்ளிவிட்டுப் புதிய தலைமுறை துணிச்சலுடன் நடையிடுமாக!

பள்ளிச் சுவர் இடிந்து மாணவி சாவு!
மகலுணவின் பல்லி! மாணவர் வாந்தி! மயக்கம்
கூரையில்லாத பள்ளிக் கூடங்கள்.
ஆசிரியர் மாணவர் தகாத உறவு.

இப்படிப்பட்ட செய்திகள் அன்றாடங்கள் ஆகிப் போயினவே. இவை ஒன்றும் தீர்க்க முடியாத சிக்கல்கள் அல்லவே!

குமுகாய உறவு—கல்வி வணிகமாகிப் போனதால் விலைகொடுத்துப் பெறவேண்டியதாகி விட்டது.

சீரழிந்து வருகின்ற நம் வாழ்க்கை முறையை மாற்றுதல் வேண்டும். அதற்கான தனிமுயற்சியும் கூட்டு முயற்சியும் பெருகுதல் வேண்டும். கூட்டு நடவடிக்கையின் வாயிலாகவே நாம் குமுக மாற்றத்தைக் கொணர்தல் இயலும்!

தனியாரிடம் உள்ள 'சொத்துடைமை'யை மாற்றும் அடிப்படையான போராட்டம் நாட்டில் உருவாதல் என்றோ? இதனை நாம் எதிர்பார்த்துக் கிடப்பது போகட்டும். நம் தாய் மொழியின் சிந்தனை முடமாகி விட்டுள்ளது. 'கல்வி' உரிமையில்லை. அதனைச் சிறப்பாக வழங்கும் ஆசிரியர்கள் அடிமைப்பட்டுள்ளார்கள். அதனிலும், அவர்களை இணைய விடாமல் அரசியலாளர்கள் பிளவுபடுத்தி வைத்துள்ளார்கள். ஓரமைப்பாக இணைவாக நின்று போராட, ஆசிரியர்கள் அனைவரும் ஒரு துறையின்கீழ் வரப்பெறுதல் வேண்டும்.

2. சாதிய மோதல்!

'இன்று இந்தியா' (India Today) எப்படியுள்ளது? 'சாதி' என்பது 'சார்தி' என்றதன் சுருக்கம் என்றார் ஒரு. தி. மு. க. இவர் தொண்டர். நீண்டகாலமாகத் தி. மு. கவில் ஒரு போராளிப் பேச்சாளர். 'சாதி'யை ஒழிப்பதில் 'அடிப்படை மக்கள்' 'ஆர்வம் கொண்டிருக்கவில்லை' என்பது அவர்தம் கருத்து. 'சாதியே அவர்களின் புகலிடமாக வுள்ளது' என்கிறார்.

சாதிய மோதல், 'படித்த சாதி'யின் தலைமையால் பெரும்பாலும் உருவாக்கப் படுகின்றது என்று கருதுகின்றனர். அரசே திட்டமிட்டு உருவாக்குவது 'சாதிய மோதல்' என்றும் கூறுகின்றனர். 'இன்று இந்தியா' இதழில் வடமாநில - அயல் மாநிலத்தவர் எழுதிய சில மடல்களில் உள்ள கருத்துகளைக் காண்போம். அவை 'சாதிய மோதலை'த் தவிர்க்கும் நோக்கில் எழுதப் பெற்றவை. காட்டுத் தீப்போல சாதியக் கலவரம் பரவிக் கொண்டுள்ளது. அதனை அணைக்க அரசு உறுதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்' என்று எதிர் பார்க்கின்றனர்.

மீரட்டிலும், தில்லியிலும் பற்றிப் பிடித்த 'சாதி'யக் கலவரம்—தடுக்கப் பெறுதல் வேண்டும். இதனைக் காவல் துறையும் அரசும் ஊதியணைக்க முயன்று. வளர்த்து வருவதாகக் கூறுகின்றனர்.

இலங்கையில் இனச்சண்டை, பஞ்சாபில், உத்தரப் பிரதேசத்தில் உள்நாட்டில் இன மதச் சண்டைகள் இவற்றைத் தீர்க்க முடியாத ஆட்சியமைப்பு மீது கடுங்கண்டனக் கணைகள் பார்கின்றன.

பள்ளர்—பறையர் மோதல், தேவர்—சேர்வை சண்டை, அம்மா, ஆத்தா வழிச் சண்டை, குலச்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையிலேயே மொழியுணர்வைத் தாண்டி, ஆரியரால்லாத பெரும்பான்மை இனமக்கள் அனைவரும் ஒன்று பட்டால் — ஒருங்கிணைந்தால் — 3 விழுக்காடு நரியினம் நசுங்கி விடும் என்பதையும் அவர்கள் உணராமல் இல்லை. எனவே ஒருமைப்பாடு என்று ஓலமிட்டாலும் தந்திரத்துடன் கையாளுவதை விட்டு விடவில்லை. —புயலன்.

Scanned with CamScanner

நூல் நலம்:

நூல் : ஆதி சங்கரரின் மக்கள் விரோதத் தத்துவம்.

ஆசிரியர் : பேரா. கே. எசு. பகவான் மொழியாக்கம் : வீ. செ. வேலிறையன்.

வெளியீடு : மகரந்தம், 19, மெற்கு மடவளாகம், கரூர் - 639 001.

62 பக்கங்கள்; விலை: உருபா- 5. 00.

சமய வழி முயற்சிகள் யாவுமே சமன்மையை நிலைநாட்டுவதில் தோற்றுத்தாம் போயின. ஏனெனில் உழைப்பவரை ஒடுக்கி அவர்தம் குருதியை உறிஞ்சிக் குடிக்க மட்டுமே மதவலிமைகள் பயன் பட்டிருக்கின்றன; பன்னூட்டு வரலாறுகளும் அதற்குச் சான்று பகர்கின்றன.

பரத கண்டத்தில் ஓரளவு சாதியை வென்ற பௌத்த சமயம் நாடு கடத்தப்பட்டு விட்டது நாம் அறிந்ததே. சமய தந்திர உத்திகளால் வேதிய மத வெறியாட்டங்கள் இன்றும் தணிந்த பாடில்லை.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதி சங்கரர் பரப்பியதோ, 'மாந்தனுக்கும் கடவுளுக்கும் வேறுபாடில்லை' என்னும் ஒருமை (அத்வைத)க் கோட்பாடாகும். ஆனால் மேல்தட்டுச் சுரண்டல் காரர்க்கே சார்பாக இயங்கிய தீண்டாமை வெறியர், அவர். மக்கள் நலம் கருதுபவராகக் காட்டிக் கொண்டு, அருளோ இரக்கமோ இன்றிக் காட்டு விலங்காண்டித்தனமாகத் திங்கிழைத்தவர்.

மக்கள் குமுகாயத்தின் உயிர் நாடியன்ன உழைக்கும் பிரிவினர்க்கு அறிவுபெறும் உரிமையைக் கூடத் தடுத்து நிறுத்தும் கொடிய, முரணான கோட்பாடும், வன்முறை, மக்கட் பகைமை, முரட்டுத்தனம், மெய்ப் பொறையின்மை, தந்நலம் போன்ற கடைப்பிடிகளும் கொண்டவர்கள் ஆதி சங்கரரும் அவர்பின் செல்வாரும் ஆவர் என்பதைத் தக்க சான்றுகளோடு விளக்கியுள்ளார் ஆசிரியர்.

சங்கரரின் முரண்பாடுகளை விவேகானந்தர் ஆய்ந்து விளக்கி விலக்கியுள்ளதை இணைத்திருப்பது சிறப்பானது.

கன்னடத்துக் கட்டுரைகள் கன்னல் தமிழில் எளிய நடையில் மிளிரும் இந்நூலைக் கற்றுத் தெளிவோர், சமய நெறிகள் வைக்கப் பெற வேண்டிய எல்லையினை நன்கு உணர வாய்ப்புண்டு. பயன்சான்ற கருத்து நூல் இது.

—மருத்துவர்.

நூல் : புதிய இந்தியாவின் இலட்சியங்களும் கனவுகளும்.

ஆசிரியர் : சர்வோதயன்.

வெளியீடு : தேன் தென்றல் பதிப்பகம், சர்வோதய கிராமம், குமரி மாவட்டம்—629 703.

144 பக்கங்கள்; உருபா 12.

மக்கள் நல அக்கறை கொண்ட நல்ல ஓர் உள்ளம்வெளியிட்டுள்ள நூல். சீர்திருத்தச் சிந்தனைகள் தெளிக்கப்பட்டுள்ளன. தனிவகை நடையில் உலக நடப்புகள் பலவும் எடுத்தாளப் பெற்றுள்ளன.

தமிழர் நல மீட்சித் தேவையை விரும்பும் ஆசிரியர், தமிழின வீழ்ச்சி அடிப்படைகளை உணராதவராகவே உள்ளார்.

நூலில் கருத்து ஒழுங்கும் நிரலும் சரியாக இல்லை. வல்லாவகையான பிழைகளும் மலிந்து கிடப்பது ஆசிரியரின் மொழிக்கல்விக் குறைபாட்டைப் பறைசாற்றுகிறது.

தோண்டியெடுக்கப்பட்ட கனிமம் போன்றுள்ள தம் அறிவார்வத்தைச் சலித்துத் தூய்மைப் படுத்தினால் பயன்பட வாய்ப்புண்டு.

—மருத்துவர்.

பெண்மையை இழிவு செய்யும் மதங்கள்

முகமதிய மதத்தில் பெண்கள் தாழ்வாகவே நடத்தப் படுவது அறிந்தது. இந்து மதத்திலேயும் பெண்மை இழிவு செய்யப் படுவதும், அடிமைப் படுத்தப் பட்டுள்ளதும் அறிந்தவையே. இயேசுவின் பெயரால் தோன்றிய கிறித்துவ மதத்திலும் பெண்ணடிமை உள்ளது. விவிலியத்தில் புனிதர் பால் எழுதிய மறை நூலில் 16ஆம் அதிகாரம், 34 ஆம் உரை கீழ்க்காணுமாறுள்ளது.

"சபையில் உள்ள பெண்டிர் பேசாமலிருக்கக் கடவர்கள். பேசும்படி அவர்களுக்கு ஆணையில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். மறையும் அப்படியே சொல்கிறது."

அதே அதிகாரம் 35ஆம் உரை, "அவர்கள் (பெண்கள்) ஒரு செயலைக் கற்றுக் கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் கணவரிடத்தில் கேட்க வேண்டும். பெண்கள் அவைகளில் பேசுவது பொறுப்பற்றதாக இருக்கும்."

என்னே இழிவு! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொன்ன அதே மறைக் கருத்தை இப்போதும் நடைமுறைப் படுத்த வேண்டுமென மதத்தினர் கூறும் போதும் - பெண்ணடிமை மதத்திலிருந்து நீங்காத போதும் மதம் மக்களை மழுங்கடிக்கும் மயக்கப் பொருள்தான். —தமிழ் முகிலன்

Scanned with CamScanner

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கேட்கவும் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் முன்வர மட்டார். எவரும் கேட்கவும் முடியாது. இளித்த வாயர்கள் உள்ள ஊரில் அதிகம் இளித்தவனே 'அரசன்' என்னும் பழமொழியும், 'அரசன்' முத்தம் கொடுத்தவள் அரம்பை' என்னும் பழமொழியும், இப்பொழுதுள்ள இந்திய அரசியல் அமைப்புக்கு மிகமிகப் பொருந்துவன ஆகும்.

தேர்தலுக்கு ஆளுங் கட்சியும் எதிர்க்கட்சியும் நிறுத்திய வேட்பாளர்கள் பார்ப்பனர்களே என்பது, இந்நாட்டில் அவர்களுடைய ஆட்சிதான் நடைபெறுகிறது என்பதற்கு அசைக்க முடியாத சான்றாகும். வேறு யார் எத்தனை கொம்பாதி கொம்பன் நினைத்திருந்தாலும் இதனை மாற்றியமைத்திருக்க முடியாது. இவர்களில் ஒருவர் முதலாளிகளுக்குச் சார்பானவர். அவருக்கு எதிராக நிறுத்தப் பெற்றவர் தொழிலாளர்களுக்குச் சார்பாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பொதுவுடைமை உணர்வுள்ளவர். ஆனால், இந்தியாவில் முதலாளிக்குச் சார்பாக உள்ளவனும் தொழிலாளிக்கு சார்பாக உள்ளதாக வெளிச்சம் போட்டுக் காட்டும் பொதுவுடைமைக் காரனும் (அவன் எத்தகைய கட்சி உடையைப் போட்டுக் கொண்டிருந்தாலும்) அவன் ஒன்றால் பார்ப்பானாக இருக்க வேண்டும்; அன்றால் பார்ப்பானுக்குச் சார்பானவனாக இருக்க வேண்டும். இந்த இரண்டு தன்மையல்லாத எவனும் இந்தியாவில் அதிகார மேலிடங்களில் அமர முடியாது என்பதையே, குடியரசுத் தலைவர் தேர்தலும் வெற்றியும் நமக்குக் காட்டுகின்றன. இந்த நிலை உள்ள வரை இந்த நாட்டு மக்களுக்கு உய்வு என்பது வரப் போவதே இல்லை என்றே சொல்ல வேண்டும். "நூல் எனிலோ கோல் சாயும்!" - ஔவையார்.

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை, கிளைப்பகை, மேல்சாதி—கீழ் சாதிக் கலவரம் இவை எல்லாம் கும்பல் (கோஷ்டி) சண்டைகளாகச் சித்திரிக்கப் படுகின்றன.

செய்திகளின் 'உண்மை' சட்டம் ஒழுங்கின் பேரில் திரையிடப்படுகின்றன. குமுகக் கல்வி இருள் மூடிக் கிடக்கின்றது! புதிய ஒளிகாண, உண்மை வரலாறு போற்றப்படுதல் வேண்டும்! —அறிவன்.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் நாம் மிகுதியான விலை கொடுத்துத்தான் ஆக வேண்டும். இறுதி வெற்றி தமிழனுடையதே! தமிழின' வரலாற்றில் களப்பிரர் காலம் இருண்ட காலமாகக் கருதப் பெறுகிறது. சிங்களவர் காலம் அதனினும் இருண்டதாகவே இருந்தாலும், எவ்வளவுதான் கொடுமையானதாகவே ஆனாலும், இதற்கும் ஒரு விடிவும் வடிவும் உண்டு என்பதை உறுதியாக நாம் நம்ப வேண்டும்.

தீயவை சூழும் பொழுது, பகைகள் ஒன்று திரண்டு மூட்டமிட்டுக் கொண்டுதான் வரும். இருப்பினும், கார் காலம் போய்க் குளிர் காலம் மாறி வருவது போலப் போர்க் காலம் போய், நலிவு தலைமாறி விடுதலை இளவேனில் வரத்தான் வரும். அக்கால் வஞ்சகம் வீழும்; இரண்டகம் சாகும்; சூழ்ச்சிகள் தலைகவிழும்! எங்கணும் உரிமையே துளிர்விடும்! உண்மை வெல்லும்! உறுதி!

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 7

கேட்கப் பெறும் உரிமைக்கு உரியவர் பலராகவும், அதை மறுப்பவர் சிலராகவும் இருந்தால் அப் போராட்டம் வெல்லும்!

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 87 TN/MS (C) 657

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5